26 SEP 2022

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
ஆணையர் அலுவலகம்
நந்தனம், சென்னை–600 035.

மே.கு.எண்.9112/எம்5/2020 நாள்.23.09.2022.

அரசாணை (3டி) எண்.7, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்–2) துறை, நாள். 06.09.2022 அசலாக அனுப்பலாகிறது.

இணைப்பு– அரசாணை (அசல்)

ஒம்/–த.இரகு
ஆணையருக்காக
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

பெறுநர்
செல்வி.மோ.பிரியதர்ஷினி,
இளநிலை உதவியாளர்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், தஞ்சாவூர்–வழியாக.

நகல்.
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (மண்டலம்) நாகப்பட்டினம்.
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், தஞ்சாவூர்.
எஸ் பிரிவு, கண்காணிப்பாளர், தலைமையலுவலகம்.
எஸ்2 உதவியாளர், தலைமையலுவலகம்.
எம்5 இருப்பு கோப்பு.

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர்
23/09/22

மே.கு.எண்: 60/அ1/2021

உதவி இயக்குநர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அலுவலகம்
தஞ்சாவூர்
நாள்: 27.09.2022

நகல் அனுப்பலாகிறது.

உதவி இயக்குநர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை
தஞ்சாவூர்

பெறுநர்: –
செல்வி. மோ. பிரியதர்ஷினி,
இளநிலை உதவியாளர்.
நகல்: இருப்பு கோப்பு

**சுருக்கம்**

மீன்வளம் மற்றும் மீனவர் நலன் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் பணி நியமனம் – செல்வி. மோ. பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்–2) துறை

அரசாணை (3டி) எண்.7

நாள் 06.09.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
சுபகிருது ஆவணி–21

படிக்கப்பட்டது :–

1) அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ) துறை, நாள் 23.01.2020.
2) ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்களின் கடித ந.க.எண்.9112/எம்.5/2020, நாள் 08.06.2022.

-----

**ஆணை:**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், தஞ்சாவூர், மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்த ரா.நாகராணி என்பவர் 11.05.2020 அன்று பணியிடை காலமானார் என்றும், அவரது வாரிசுதாரரும் / மகளுமான செல்வி மோ. பிரியதர்ஷினி 16.06.2020 நாளிட்ட விண்ணப்பத்தில் அவரது தாயார் இறந்த பிறகு குடும்பம் வறிய நிலையில் உள்ளதாகவும் குடும்பத்தை காப்பாற்ற அவருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குமாறும், அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் மீன்துறை உதவி இயக்குநர், தஞ்சாவூர் அலுவலகத்தில் விண்ணப்பம் அளித்திருந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், ஆணையர் தனது கடிதத்தில் செல்வி. மோ. பிரியதர்ஷினி, பத்தாம்வகுப்பு பொதுத்தேர்வில் தேர்ச்சி பெற்றமைக்கான மதிப்பெண் பட்டியல், மெய்த்தன்மை, பள்ளித் தேர்வுகள் குழுமம் மற்றும் அரசு தேர்வுகள் உதவி இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் சரிபார்க்கப்பட்டு சான்றளிக்கப்பட்டுள்ளது என்றும் இவரது பிறந்த நாள் 23.01.2002 என்றும் அரசு ஊழியர் இறந்த நாளில் இவரது வயது 18 வருடம் 3 மாதங்கள் என்றும், இறந்த அரசு ஊழியரின் குடும்பத்தில் பொருள் ஈட்டுபவர் வேறு எவரும் இல்லை எனவும் அசையும் அசையா சொத்துக்கள் ஏதும் இல்லை என பாபநாசம் தாலுக்கா வட்டாட்சியர் சான்றிளித்துள்ளதன் அடிப்படையிலும் செல்வி. மோ.பிரியதர்ஷினிக்கு கருணை

அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் இளநிலை உதவியாளராக தஞ்சாவூர் மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் 02.01.2021 நாளிட்ட ஆணையர் செயல்முறை எண்.9112/எம்5/2020-ன்படி பணியமர்த்தப்பட்டு, தனியர் 08.01.2021 முற்பகல் முதல் பணியாற்றி வருகிறார் என்றும் தெரிவித்து, கருணை அடிப்படையில் தற்காலிகமாக பணியமர்த்தப்பட்ட செல்வி மோ. பிரியதர்ஷினி என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த 08.01.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்க முடிவு செய்து, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தஞ்சாவூர், மீன்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 08.01.2021 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட செல்வி. மோ. பிரியதர்ஷினி என்பவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 08.01.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை தொழிலளார் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.கு.எண்.15372/Q1/2022-1, நாள் 26.08.2022 மற்றும் மனிதவள மேலாண்மை துறையின் அ.சா.கு.எண்.3060644/G2/2022, நாள் 30.08.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகின்றன.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-35.
செல்வி. மோ. பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளர்,
(ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலமாக).

நகல்
மனிதவள மேலாண்மை துறை, சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, சென்னை-9.

இருப்புக்கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. Thiru 8/9/2022
பிரிவு அலுவலர்
07/09/2022

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை,
ஆணையர் அலுவலகம்,
நந்தனம், சென்னை–600 035.

ந.க.எண்.28769 /எஸ்2/2022 நாள்:29.09.2022

குறிப்பாணை

பொருள் : பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – இளநிலை உதவியாளர் – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை : கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்–2) துறை அரசாணை (3டி) எண்.7 நாள் 06.09.2022.

******

கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு தஞ்சாவூர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரியும் செல்வி.மோ.பிரியதர்ஷினி, இளநிலை உதவியாளருக்கு பார்வையில் காணும் அரசாணையின் மூலம் 08.01.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்பட்டுள்ளது. தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளான 08.01.2021 முற்பகல் முதல் தொடர்ந்து வரும் மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து ஆணையிடப்படுகிறது. மேலும் தகுதிகாண் பருவகாலத்தில் மீன்துறை நடைமுறை நூல் பாகம்–1–ல் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினை முடித்திருக்க வேண்டும்.

மேற்படி நிர்ணயிக்கப்பட்ட தேர்வில் அதிகபட்சம் 5 ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெறாமல் இருந்தால் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடிக்கப்பட மாட்டாது. மேலும் பணியிலிருந்து நீக்கப்படுவார் (Termination of Service) என தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/–த.இரகு
ஆணையருக்காக
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை

பெறுநர்
செல்வி.மோ.பிரியதர்ஷினி,
இளநிலை உதவியாளர்.
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், தஞ்சாவூர்–வழியாக.

நகல்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை உதவி இயக்குநர், தஞ்சாவூர்
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை இணை இயக்குநர் (மண்டலம்) நாகப்பட்டினம்
'எம் 5' உதவியாளர், தலைமை அலுவலகம்.

- இனி வரும் காலங்களில், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களது பணிவரன்முறை தொடர்பான அரசாணை சார்பு செய்யும் பொழுது தனியர்களது தகுதிகாண் பருவம் குறித்து விளம்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

'எஸ் 2' இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பலாகிறது//

கண்காணிப்பாளர்